# உழவன் வீட்டுக் கவிதை

இராஜலக்ஷ்மி சந்திரசேகரன்

உழவன் ஒருவன் உரைத்தான்
உன்னதமான தன் மனையாளிடம்
நான் வெறும் விவசாயி
கவிதைகளில் ஈர்க்கப்படாதவன்
கடின உழைப்பாளி என்று !
காந்தனை நோக்கியவள்
காதலோடே மொழிந்தாள் ...
தக்க தருணத்தில்
வானுக்கும் மழைக்கும்
காற்றுக்கும் வெயிலுக்கும்
விதைத்த விதைகளின்
அறுவடை பலனுக்கும்
ஒவ்வொரு மாடுக்கும் ஆடுக்கும்
அதன் கன்றுக்கும்
குட்டிகளுக்கும்
சேவலுக்கும் கோழிக்கும்
அது மட்டுமா.,இன்ன பிற
செடி கொடிகளுக்கும்
எல்லாவற்றிற்கும்
பெயரிடும் போதும்..
உழைப்புதான் கடவுள் என்று
உழைத்துக் கொண்டே இருக்கும்
தெய்வம் தொழாத நீங்கள் ..
நித்தமும் நன்றிப் பெருக்கில் !
தினமுமே தலை வணங்குதல்
பார்த்திருக்கிறேன், இயற்கைக்கு..
கவிஞர்களின் வாழ்வான
கவிதையைத் தான்
வாழ்க்கை என்றே
வாழ்கிறீர்கள்..
நீங்களாவது வெறும்
விவசாயி ஆவது..
ஒப்புக் கொள்கிறான் உழவன் ..
துணையை அணைத்து
அது சரி ,உன்னோடு சேர்ந்த
கவிதையும் அழகு தான் ! ஈர்த்து
விட்டாயே !
தனக்கும்
தைப் பொங்கலுக்கும்
மட்டும் அல்ல
தினம் தோறும்
தரணி முழுவதற்கும்
அன்னம் ஆக்குபவன்!
தலைவன் நீ தான் என்றால்
தாயுமானவள்



ஓவியம்: ChatGPT



கோயம்புத்தூரில் பிறந்து வளர்ந்தவர்.ஆங்கில இலக்கியத்திலும் செய்தி தொடர்பியலிலும் இளங்கலை முதுகலை தேர்ச்சி. தமிழ் மொழியின் மீதும் கவிதைகள் மீதும் ஆர்வம் கொண்டவர். 2023 நவம்பர் மாதம் துவங்கிய ஜப்பான் மக்கள் சிந்தனைப் பேரவையின் துணைத்தலைவராக பொறுப்பேற்று, 2023 டிசம்பர் மாதத்தில் நிகழ்ந்த பாரதி விழாவினை தொகுத்து வழங்கியவர். பொங்கல் மலருக்குத் தொடர்ச்சியாக கவிதை வழங்கி வருபவர்.

# கனத்த சிறகுகள்

காணக் கிடைக்காத
பெரும் இன்பம்
இவர்கள் சிரிக்கையில்
தாங்கொணாத
பெரும் துன்பம்
இவர்கள் அழுகையில்
வெகுண்டு எழும்
பெரும் கோபம்
இவர்கள் பிடிவாதத்தில்
பயம் கொள்ளச் செய்யும்
பெரும் பதட்டம்
இவர்கள் சாகசத்தில்
என்னவென்றே
எடுத்துச் சொல்ல
முடியாத உணர்வும் உண்டு

இவர்கள் மௌனித்து
மொழியாமல்
வார்த்தைகளை மென்றும்
விழுங்கியும்
சிந்தனையுள் சிதைந்து
கிடக்கையில்
பெற்ற பிள்ளைகளின்
கண் மணிகளில் ,கணம் தோறும்
காண்கிறோம் ., உணர்வெனும்
கடவுளை.
இவர்கள் ..
நம்மை இயக்கும்
நமது கனத்த
சிறகுகள்

## தியானி

பாதுகாப்பாக பயணிக்கிறேன்
என்னுள் நான்
யாரும் புலம்பெயராத
பூங்காவனமாக
பூத்துக் கிடக்கிறது ...
பழக்கப்படாத பாதை தான்
பயப்படாது பயணிக்கிறேன்
புதையுண்டு கிடக்கும்
பெட்டகம் தேடி.
அண்டம் முழுதுமாக
என்னுள் அகப்பட்டு

ஆழமான அமைதியில் எனது
ஆன்மாவுடனான
உரையாடல்.
கடலை நோக்கிய நதியென
என்னுள்ளே பயணித்து
எனை நான் தேட
அதிசய அவனியுள்
ரகசிய மர்மங்கள்
உண்மையை உரக்கச்
சொல்கிறது,
உயிர் வாழ, வளர,
**உன்னை நீ உணர்.**